
AHMADI TAMIL CHURCH
ST.PAUL'S CHURCH
KUWAIT
அஹமதி தமிழ் திருச்சபை
PREPARE TO MEET GOD
பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்
அஹமதி தமிழ் திருச்சபை
" நீங்கள் என்னைத்
தெரிந்து கொள்ளவில்லை,
நான் உங்களைத்
தெரிந்து கொண்டேன். "
யோவான் -15:16
செய்தி மலர்
2023
அக்டோபர்
இதழ் : 06
மலர் : 20



# சபை ஊழியரின் அன்பு மடல்



## கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தை தரும்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்களையும், ஆசீர்வாதங்களையும் கூறிக்கொள்ளுகிறேன்.

கடந்த செப்டெம்பர் மாதம் முழுவதும் நம்மை கரம் பிடித்து நடத்தின கர்த்தர் வரும் அக்டோபர் மாதத்திலும் அதிசயமாய் வழி நடத்துவாராக.

வேதம் கூறுகிறது "கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தை தரும் அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்" என்று (நீதி-10:22)

ஆம் பிரியமானவர்களே, கர்த்தர் கொடுக்கும் ஆசீர்வாதங்கள் எப்போதுமே வித்தியாசமானவைகள். நம்முடைய இருதயத்தை தாழ்த்தி, வெறுமையாக்கி, நொறுங்குண்டு, பணிந்து, கர்த்தரின் முகத்தை தேடும்பொழுது கர்த்தரின் ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்வோம். அப்படி என்னென்ன ஆசீர்வாதங்களை கர்த்தர் கொடுக்கிறார் என்பதை கீழ்வரும் பகுதியில் காண்போம்.

### 1.கட்டாத பட்டணங்களை உனக்குக்கொடுப்பேன்..

நீ கட்டாத வசதியான பெரிய பட்டணங்களையும், நீ நிரப்பாத சகல நல்ல வஸ்துக்களாலும், நிரம்பிய வீடுகளையும், நீ வெட்டாமல் வெட்டப்பட்டிருக்கிற துரவுகளையும், நீ நடாத திராட்சைத் தோட்டங்களையும், ஒலிவத் தோப்புகளையும் அவர் உனக்கு கொடுப்பதினால் நீ சாப்பிட்டு திருப்தியாகும் போதும் நீ அடிமைப்பட்டிருந்த வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து உன்னை புறப்படப் பண்ணின கர்த்தரை மறவாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. (உபா-6:11,12)

நீங்கள் பண்படுத்தாத தேசத்தையும் நீங்கள் கட்டாத பட்டணங்களையும் உங்களுக்கு கொடுத்தேன். அவைகளில் குடியிருக்கிறீர்கள். நீங்கள் நடாத திராட்சைத் தோட்டங்களின் பலனையும், ஒலிவத்தோப்புகளின் பலனையும் புசிக்கிறீர்கள் ஆகையால் நீங்கள் கர்த்தருக்கு பயந்து அவரை உத்தமும் உண்மையுமாய் சேவித்து அந்நிய தேவர்களை அகற்றி விட்டு கர்த்தரை சேவியுங்கள்.. (யோசு–24:13,14)

ஆம் பிரியமானவர்களே, நாம் வாழும்படிக்கு இந்த தேசத்திலே நமக்காக வீடுகளை ஆண்டவர் கட்டி எழுப்பியிருக்கிறார். நமக்காக அநேக வேலை ஸ்லதலங்களை உருவாக்கி நமக்கு சம்பளம் கொடுக்கிறார். நாம் அறியாத தேசத்தின் நன்மைகளை நமக்கு அனுபவிக்க கொடுக்கிறார். நம் கையின் பிரயாசங்களை ஆசீர்வதிக்கிறார். நம் தேசத்தில் வாழும் நம் குடும்பத்தினரையும் போஷிக்கிறார். அங்கும் வீடுகளைக் கட்டி கொடுக்கிறார். பொக்கிஷங்களை சேர்க்க வைக்கிறார். நம்முடைய தேவனுடைய அன்பு எவ்வளவு பெரியது பாருங்கள். நாம் அவருக்கு நன்றியுள்ளவர்களாய் வாழ்வது எத்தனை அவசியம் என்பதை உணர்ந்து அவருக்காக வாழ நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தைக் காணிக்கையாக அர்ப்பணிப்போம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

## 1.புதையல்களை உனக்குக் கொடுப்பேன்...

வெண்கலக் கதவுகளை உடைத்து இரும்பு தாழ்ப்பாள்களை முறித்து அந்தகாரத்திலிருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக்கொடுப்பேன். நான் என் தாசனாகிய யாக்கோபின் நிமித்தமும் நான் தெரிந்து கொண்ட இஸ்ரவேலின் நிமித்தமும் நான் உன்னை பெயர் சொல்லி அழைத்து நீ என்னை அறியாதிருந்தும் உனக்கு நாமம் தரித்தேன். நானே கர்த்தர். வேறொருவர் இல்லை என்னைத் தவிர தேவன் இல்லை. (ஏசா–45:4,5)

ஆம் பிரியமானவர்களே, நாம் எதிர்பார்க்காத இடங்களிலிருந்து நமக்கு வருமாணம் வரப்பண்ணுகிறார். நாம் அறியாத இடங்களிலிருந்து நமக்கு ஆசீர் வாதத்தை வரப்பண்ணுகிறார். கொடுமைகள் நிறைந்த இந்த குவைத் தேசத்திலும் நம்மை ஆசீர்வதித்து உயர்த்துகிறார். கொடுமையான மேலதிகாரிகள் உள்ளத்தையும் உருகச் செய்கிறார். மறைந்திருக்கிற ஆசீர்வாதங்களை கொள்ளையாய் நம்மை சுதந்தரிக்கும்படி செய்கிறார். ஆம் மீனின் வாயிலிருந்து வெள்ளிப் பணத்தை வரவழைத்து அரசாங்கத்திற்கு வரி கட்டியவர் நம்முடைய இயேசு அல்லவா?

இஸ்ரவேல் மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தபொழுது பொன்னுடைமைகளையும், வெள்ளியுடைமைகளையும் கல் நெஞ்சம் படைத்த எகிப்தியரிடமிருந்து கொள்ளையிடச் செய்தவர் நம் தேவனல்லவா? மறைந்திருக்கிற பொக்கிஷங்களை நிச்சயமாக நம் கண்களுக்கு வெளிப்படுத்துவார். ஆமென். "நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன். நீங்கள் என் நாமத்தினாலே பிதாவை கேட்டுக்கொள்வது எருவோ? அதை அவர் உங்களுக்கு கொடுக்கத் தக்கதாக நீங்கள் போய் கனி கொடுக்கும்படிக்கும் உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன்" (யோவா-15:16)

பிரியமானவர்களே. கர்த்தருடைய முகத்தையே தேடி காத்திருக்கிறபொழுது மேற்ச்சொன்ன புதையல்களையும் பொக்கிஷங்களையும் கர்த்தர் உங்களுக்கு கொடுப்பார். வேதம் கூறுகிறது " என்னை நோக்கிக் கூப்பிடு அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து நீ அறியாததும், உனக்கு எட்டாதுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்" (எரேமியா-33:3)

## 2.பரலோக ஆசீர்வாதங்களைக்கொடுப்பேன்...

ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியை புசிக்கக் கொடுப்பேன், இரண்டாம் மரணத்தினால் அவன் சேதப்படுவதில்லை, நான் மறைவான மன்னாவை புசிக்கக் கொடுத்து அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும் அந்தக்கல்லின் மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன், நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றது போல ஜாதிகளின் மேல் அதிகாரம் கொடுப்பேன். வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும். ஜீவ புஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப் போடாமல் என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவரது நாமத்தை அறிக்கையிடுவேன். அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன் அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை. என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்து இறங்கி வருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும் என் புதிய நாமத்தையும் அவன் மேல் எழுதுவேன். நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்தது போல ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள் செய்வேன். (வெளி-2,3 அதிகாரங்கள்)

ஆம் பிரியமானவர்களே, மேற்சொன்ன அனைத்து பரலோக ஆசீர்வாதங்களையும் கர்த்தர் நமக்கு கொடுப்பார். அதற்கு நாம் செய்ய

வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின்பற்றி (1-பேது -2:21)அவரைப் போலவே ஜெயத்தோடு வாழும் பொழுது (யோவா-16:33) இந்த ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக்கொள்ளுகிறோம். ஆண்டவராகிய இயேசு சொல்லியிருக்கிறார் இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்று (மத்-28:20)

கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து வரும் அக்டோபர் மாதத்தில் மேற்சொன்ன அனைத்து ஆசீர்வாதங்களையும் பெற்று வாழ வழி நடத்துவாராக.

கிறிஸ்துவின் பணியில்,
அன்பு சகோதரன்,
S.ஸ்டாலின்

## தேவ செய்தி

"நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்" (மத்-18:3)

அன்பான சகோதர சகோதரிகளே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் சொன்ன வார்த்தை. நாம் அனைவருமே பரலோகத்தில் ஆண்டவருடன் வாசம் செய்ய வேண்டும் என்பதே அவருடைய விருப்பம். அதற்கு முதலாவதாக எல்லாரும் மனந்திரும்பி பிள்ளைகளைப் போல ஆக வேண்டும் என்பதை பற்றி இயேசு சொல்வதை பார்க்கலாம்...

சீஷர்கள் தங்களுக்குள்ளே விவாதித்து பரலோக ராஜ்ஜியத்தில் யார் பெரியவனாயிருப்பான் என்று கேட்கும் போது இயேசு சொன்ன வார்த்தைதான் இது. எல்லாவற்றிலும் மேலானவர் பிதாவாகிய தேவன் ஒருவரே. அவர் தம்முடைய ஒரே குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு தந்து நம்மை சாபங்களிலிருந்தும் பாவங்களிலிருந்தும் மீட்டெடுத்து இரட்சிப்பை தந்தருளினார். அது மட்டுமல்ல இயேசுவிற்கு பிதா சகல அதிகாரத்தையும் கொடுத்தார். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வாரன்" (யோவா-14:6)-ல் வாசிக்கிறோம்.

இயேசுவினிடத்தில் சிறு பிள்ளைகளை அவர் தொடுவதற்கு அவரிடம் கொண்டு வரும்போது சீஷர்கள் அதட்டினார்கள். அதைக் கண்டு இயேசு விசனமடைந்து சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு தடை

தேவனுடைய ராஜ்ஜியம் அப்படிபட்டவர்களுடையது. (மாற்கு-10:14) என்று சொல்வதை பார்க்கிறோம்.

நாம் அறிந்து கொள்ள வேண்டிய காரியம் பிள்ளைகளைப் போன்றது பரலோக ராஜ்ஜியம். அதில் கண்ணீர் இல்லை, கவலை இல்லை, பசி இல்லை, துக்கமில்லை. சந்தோஷமும் சமாதானமும்தான். ஆமென்.

நாம் குழந்தைகளைப் போல மாற வேண்டும் என்றால்....

அவர்களின் குணநலன்களை பார்க்கலாம்.

## 1.பயம்..

எப்பொழுதுமே குழந்தை பயப்படும் அதினால்தால் புரியாத காரியத்தை குழந்தைகளுக்கு சொல்லி பயமுறுத்துவார்கள் பெற்றோர்கள். ஆனால் வேதத்தில் யாருக்கு பயப்படவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம், ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" (மத்-10:28)

அதுமட்டுமல்ல சங்கீ-128-ல் சொல்லிய படி சகல ஆசீர்வாதங்களும் நமக்கு வேண்டுமென்றால் கர்த்தருக்கு பயப்பட வேண்டும் என்று வேதம் நமக்கு போதிக்கிறது. கர்த்தருடைய கிருபை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு சங்கீ-103:11,17-வசனங்களை வாசிக்கும் போது தெரிந்து கொள்ளலாம்.

பிள்ளைகளின் பயத்தை போல நம்மில் தேவனிடத்தில் இருக்க வேண்டிய முதலாவது காரியம் <u>"தேவ பயம்"</u>

## 2.அழும்..

பிள்ளைகள் தனக்கு வேண்டியதை பெற்றுக்கொள்ள கண்ணீர் விட்டு அழுது போராடி எப்படியாவது தங்களது பெற்றோர்களிடத்தில் பெற்றுக்கொள்வார்கள். பெற்றோர்களும் பிள்ளையின் கண்ணீரைக் கான முடியாமல் எப்படியாவது கொடுக்க முயற்சிப்பார்கள். அது போலவே நம் கண்ணீரைக் காண்கின்ற தேவன் நம்முடைய தேவன். நம் கண்ணீரை கணக்கில் வைத்திருக்கிறார் (சங்கீ-56:8) ஆகாரின் கண்ணீரைக் கண்ட தேவன், அன்னாளின் கண்ணீரை கனிடு பதில் தந்தார்.

எசேக்கியாவின் கண்ணீர் ஜெபத்திற்கு தேவன் பதில் கொடுத்து அவனுடைய வாழ்நாளையும் கூட்டுகிறார் என்று வேதத்தில் வாசிக்கிறோம். நம் கண்ணீரைக் கண்டும் யார் புறக்கணித்து ஒதுக்கி தள்ளினாலும் மனதுருகும் தேவன் நம்மைத் தள்ளாமல் ஏற்றுக்கொள்கிறார். ஆமென்.

## 3. மறந்து விடும் (மன்னிக்கும்)..

குழந்தைகளின் பிரதான குணமே மன்னித்து மறந்து விடுவதுதான். ஆனால் பெற்றோர்களோ பிள்ளைகளின் பிரச்சனைகளை பெரிதாக்கி ஒருவருக்கொருவர் பேசாமல் இருப்பார்கள். ஆனால் பிள்ளைகள் எல்லாவற்றையும் மறந்து விட்டு சகஜமாக சிரித்து பேசி விளையாடுவார்கள். பவுலும் தன்னுடைய நிருபத்தில் எழுதியிருக்கிறார். ஒருவர் பேரில் ஒருவருக்கு குறைபாடு உண்டானால் கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். (கொலோ-3:13). பலர் சிறிய விஷயத்திற்கு நீண்ட நாட்களாக பேசாமல் இருப்பார்கள். கர்த்தருடைய வார்த்தையை விசுவாசிக்கிற நாம் மற்றவர்களின் குறைகளை மன்னிப்பது என்பது நம்மால் கூடாத காரியமாக இருக்கிறது. " அவர் நம்முடைய பாவங்களுக்குத் தக்கதாகச் செய்யாமலும் நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிகட்டாமலும் இருக்கிறார்" (சங்கீ-103:10) நம் தேவன் நம்மை தண்டிக்கிற தெய்வம் இல்லை மன்னிக்கும் தெய்வம் ஆமென்.

இயேசு தன்னை சிலுவையில் அறைந்த போதும் அவர் சொன்னது "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று இவர்கள் அறியாதிருக்கிறார்களே" என்று (லூக்-23:34) அந்த வார்த்தையை தியானம் செய்கிறோம்.

## 1. தன் தாயை தந்தையை சார்ந்திருக்கும்..

குழந்தை எப்போதுமே தன்னுடைய பெற்றோர்களையே சார்ந்திருக்கும், அவர்களையே நம்பியிருக்கும், எது வேண்டுமென்றாலும் தன் தாயை தந்தையை அழைக்கும். எந்தச் சூழ்நிலையிலும் தன்னுடைய பெற்றோரை விட்டுப் பிரியாது. அது போல எப்பொழுதும் கர்த்தரை நம்பி, அவரை விட்டுப் பிரியாமல், அவரிடம் மட்டுமே வேண்டி ஜெபம் செய்யும் போது சகலத்தையும் பெற்றுக்கொள்ளலாம். "ஸ்தீரியானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை" (ஏசா-49:15). ஒரு தாய் தன் பிள்ளையைத் தேற்றுகிறது போல நம்மை தேற்றுகிறவர் இயேசு. யோபு எந்தச்சூழ்நிலையிலும் கர்த்தரை மட்டுமே நம்பியிருந்தான், முடிவு சமாதா-னம் மற்றும் இரட்டிப்பான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டான். "கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து கர்த்தரையே தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிறவன் பாக்கியவான்" (எரேமி-17:7)

தாவீதும் தான் நெருக்கப்படுகையில் கர்த்தருக்குள் தன்னை திடப்படுத்திக்கொண்டான் என்று வேதத்தில் வாசிக்கிறோம். நாமும் கூட தேவனுக்கு பயந்து, மற்றவர்களை மன்னித்து (மறந்து), கர்த்தர் மேல் நம்பிக்கை வைப்போம்.

அன்பான சகோதர சகோதரிகளே இயேசுவைப் பின் பற்றுகிற நாம் எப்படியிருக்கிறோம் என்பதை சிந்தித்துப் பார்ப்போம் குழந்தைகளைப் போல மேற்சொன்ன காரியங்களை சற்று சிந்தித்து செயல்படுவோம்.

கர்த்தர் ஆசீர்வதிப்பாராக ஆமென்.

கர்த்தரின் பணியில்,
S.சுகுமாரன்.

## வாலிபர் பகுதி

### சத்துருக்களுக்கு முன்பாக பந்தியை ஆயத்தப்படுத்துகிற தேவன்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்!

உங்கள் யாவரையும் இந்த இதழ் வழியாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நம்முடைய முன்னேற்றங்களை ஆசீர்வாதங்களைப் பார்த்து பொறாமை கொண்டு நம்மை எப்படியாவது வீழ்த்த வேண்டும் என்ற பொறாமை கொண்ட மனிதர்கள் நிறைந்த உலகத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். இத்தகைய சூழ்நிலையில் வாழ்ந்து வருகிற நபராக நீங்கள் இருந்தால் இந்த இதழ் வழியாக தேவன் உங்களோடு பேசுவார். கர்த்தர் உங்களுக்கு கொடுக்கும் வாக்குத்தத்தம்.

**“சத்துருக்கள் முன்பாக உனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்துவேன்”**

<u>வேலை ஸ்தலங்களில் தீட்டானதுக்கு விலகி ஓடுவதால் வரும் நன்மை</u>

வேதாகமத்தில் நல்ல ஜெப வீரனுக்கு எடுத்துக்காட்டாக திகழும் நான்கு வாலிபர்கள் தானியேல்,சாத்ராக்,மேஷாக்,ஆபத்நேகோ குறித்து உங்களோடு பேச விரும்புகிறேன். அங்கு பணி செய்ய தேர்வான நபர்களுக்கு தினமும் (தானியேல்-1:5) ராஜா உண்ணும் போஜனத்திலும், குடிக்கிற திராட்சை ரசத்திலும் தினமும் ஒரு பங்கு கொடுக்கப்பட வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்படுகின்றது. ஆனால் தானியேலின் கண்களுக்கு அது தேவனுக்கு பிரியமில்லாத தீட்டான காரியமாக அது தோன்றுகிறது அதனால் அதை புசிப்பதில்லை என்று தானியேலும் அவன் நண்பர்களும் தீர்மானம் பண்ணிக்கொண்டார்கள். (தானியேல்-1:8) அவர்கள் தாம் உயர்ந்த இடத்தில் வேலை செய்கிறோம். ஒரு நாட்டின் ராஜா உண்ணும் உணவு என அதில் இச்சை கொள்ளாமல் தேவனுக்கு பிரியமா? என பார்த்து விலகியதன் மூலம் தேவன்

தொடர்ந்து தானியேல் 1-ம் அதிகாரத்தை வாசித்தால் தேவன் செய்த பிரம்மிக்க முடியாத காரியத்தை பார்க்க முடியும்.

வேலை ஸ்தலங்களில் தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களுக்கு விலகி விடுதலின் முதல் நன்மை.

நேபுகாத்நேச்சார் அரண்மனையில் வேலை செய்கிற ஞானிகளுக்கு முதல் சழதநஉவ வருகிறது. (தானியேல்-2:1) ராஜா நித்திரையிலே ஒரு சொப்பனம் கண்டு அவன் ஆவியிலே கலங்கினபடியால் அந்த சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லும்படியாக அனைத்து ஞானிகளுக்கும் கட்டளை கொடுக்கப்பட்டது.

இதற்கு அர்த்தம் சொல்லமுடியாத பட்சத்தில் அனைத்து ஞானிகளும் கொல்லப்பட வேண்டும். தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபத்நேகோ உள்பட இதுவே ராஜாவின் ஆணை. ஞானிகள் கொல்லப்படுவதை கண்காணிக்க கண்காணிப்பாளர்களும் நியமிக்கப்பட்டனர்.

மறைபொருளை மனுஷீக ஞானத்தினால் அறிய முடியாது என எண்ணி தேவனுடைய சமூகத்தில் தானியேல் காத்திருந்து ராஜாவின் சொப்பனத்தின் அர்த்தத்தையும் தெரிந்து கொண்டான். ராஜாவின் முன்பாக போய் நின்று தைரியமாய் அதின் அர்த்தத்தை சொன்னான். ராஜா வெகுவாக தானியேலை பாராட்டி தானியேலுக்கு சழஅழவ஡ைெ கொடுத்து உயர் பதவியிலே அமர்த்தப்பட்டான்.

## சத்துருக்கள் முன்பாக தலை நிமிரச் செய்த தேவன்.

தரியு ராஜா அரசாண்ட வருஷத்தில் தானியேலுக்குள் விஷேசித்த தேவனுடைய ஆவி இருப்பதை ராஜா உணர்ந்து "அவனை" ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த ராஜா நினைத்தான்(தானியேல்-6:3)

அவனுடன் வேலைபார்க்கும் ஞானிகளுக்கு இந்த காரியம் பொறாமையாக காணப்பட்டது எனவே தானியேலே எப்படியாவது குற்றப்படுத்த வேண்டும் என தீர்மானம் பண்ணி "இந்த தானியேலை அவனுடைய தேவனைப்பற்றிய வேத விஷயத்திலே குற்றப்படுத்தும் முகாந்திரத்தைக் கண்டுபிடித்தாலொழிய அவனை வேறொன்றிலும் குற்றப்படுத்தும் முகாந்திரத்தை கண்டுபிடிக்க கூடாது என்றார்கள். (தானியேல்-6:5)

எனவே தானியேலின் பெலன் அறிந்து அவனை குற்றப்படுத்த வேண்டும் என உடன் வேலைபார்க்கும் ஞானிகள் திட்டமிட்டனர். எனவே அவர்கள் தரியு ராஜாவினிடத்தில் போய் "ராஜாவே 30 நாள் வரையிலும் ராஜாவாகிய உம்மைத்தவிர எந்த தேவனையானாலும் மனுஷனையானாலும் நோக்கி யாதொரு விண்ணப்பம் பண்ணினால் அவன் சிங்கக் கெபியில் போடப்பட வேண்டும் என உத்திரவடும்படி வேண்டிக்கொண்டனர் காரணம் தானியேல் ஒரு நாளைக்கு தவறாமல் மூன்று வேளையும் ஜெபம் செய்கிறவனாயிருந்தான்.

தொடர்ச்சி 14-ம் பக்கத்தில்

..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்..
... (ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வன். நத்தானியேல் நக்கீரன்
செல்வி. ஷாலோம் கிரேஸ் ஆமோஸ்
செல்வன். ஜோசப் அருள் தர்மர்
செல்வி. கீதா கொம்மையன்
சகோ. சுஜின் ஹெக்கல்
செல்வன். சாலமோன் இம்மானுவேல்
சகோதரி. டாப்னி ஜெபசிங்
சகோ. ஸ்டாலின் சுனில்
சகோதரி. ஜீவரத்தினம் மகேஷ்ராஜ்
செல்வன். ஜீவன் ஆஷ்வா பிரசாத்
செல்வன். ஜோஷ்வா ராமர்
சகோ.வர்கீஸ்
செல்வி. ரியா பிரிட்டி ஸ்டீபன்
செல்வன். ஆதீத் சிங் சுபின் சிங்
செல்வி.வைதேகி கலியமூர்த்தி
செல்வன். லீதாஹரன் ராஜாகுமார்

செல்வி. லெனிஷா வர்கீஸ்
செல்வன். அனீஷ் தினேஷ்
செல்வி. பிரியங்கா சதீஷ்குமார் எத்திராஜ்
சகோ. மார்க் ஆன்டனி
சகோதரி. தமிழ்செல்வி
சகோதரி. அனிஷா ஆல்வின்
செல்வன். ரோஷன் அசோக்குமார்
செல்வி. அரோலினா விஜயன்
செல்வன். கேபரியேல் ஜெரேமியா
சகோ. ஜெயக்குமார் ஞானதாஸ்
சகோ. தம்புகுமார் டென்னிஸ்
சகோதரி. ஜெபராணி
செல்வி. இபின் காட்சில் ஜெயகுமார்
சகோதரி. மரகதம் ஸ்டீபன்
சகோதரி.பியூலா மெர்ஸி ஜெகநாதன்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்
(ஆதி .22:18)

திருமதி/திரு. குமாரசாமி
திருமதி/திரு. விபின்
திருமதி/திரு ஜான் கெஸ்டன்
திருமதி/திரு. செங்குட்டுவன்
திருமதி/திரு. ராஜா குமார்

# 2023 அக்டோபர் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/10/2023 | சகோ.சுதாகர் | சகோ.ஸ்டாலின் |
| 08/10/2023 | சகோ.சுகுமார் | சகோ.கறிஸ்டோபர் தேவராஜ் |
| 15/10/2023 | சகோ.தாமஸ் | சகோ.பிரசாத் |
| 22/10/2023 | சகோ.சுபின் சிங் | சகோ.கிறிஸ்டோபர் |
| 29/10/2023 | சகோ.சாம் சுந்தர் | சகோ.பக்த ராஜ் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/10/2023 | சகோ.வில்சன் | சகோ.ஸ்டாலின் |
| 13/10/2023 | சகோ.டேவிட் | சகோ. ரவிஜான் பீட்டர் |
| 20/10/2023 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 27/10/2023 | சகோ. ஜோசப் | சகோ.ஆரோக்கியதாஸ் |

**12/10/2023 அன்று முழு இரவு ஜெபம் ஆராதனை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

**07/10/2023 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:00 முதல் இரவு 8:30 மணிவரை

வேத வினா பகுதி – யாக்கோபு

**27/10/2023 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:00 முதல் இரவு 8:30 மணிவரை

வேத வினா பகுதி – 2 இராஜாக்கள்

# 2023 அக்டோபர் மாதத்திற்கான வேத வினா!

கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்



1. மோசேயின் பிள்ளைகள் எத்தனை பேர்? அவர்கள் பெயர்கள் என்ன?
2. லாபான் யாக்கோபின் சம்பளத்தை எத்தனைமுறை மாற்றினான்?
3. கர்த்தர் மோசேக்கு நியாயபிரமாணத்தை எந்த மலையில் கொடுத்தார்?
4. கர்த்தர் யோசேப்பினிமித்தம் எந்த எகிப்தியன் வீட்டை ஆசீர்வதித்தார்?
5. மோசேயின் மாமன் எந்த தேசத்தான்?
6. யோசேப்பு தன் சகோதரர்களுக்கு தன்னை வெளிப்படுத்திய பொழுது பாசத்தின் மிகுதியால் என்ன செய்தான்?
7. பார்வோனிடம் பேசும்போது மோசே மற்றும் ஆரோனின் வயது என்ன?
8. நோவா காலத்தில் பூமி அழிக்கப்படும்போது எத்தனை நாட்கள் மழை பெய்தது?
9. மன்னாவை தலைக்கு எந்த அளவு எடுத்துக் கொள்ளும்படி தேவன் கட்டளை யிட்டார்?
10. ரெபெக்காளை அவள் சகோதரர்கள் எப்படியாய் வாழ்த்தினார்கள்?
11. மோசேயிடம் கர்த்தர் தம்முடைய பெயரை எப்படி குறிப்பிட்டார்?
12. உடன்படிக்கை பெட்டி எந்த மரத்தால் செய்யப்பட்டது? அதன் அளவுகள் என்ன?
13. யோசேப்புக்கு பார்வோன் கொடுத்த பதவியின் பெயரென்ன?
14. எபிரேய ஆண் குழந்தைகளைக் கொல்லாமல் உயிரோடே காப்பாற்றியது யார்?
15. ஆபிரகாம் எந்த தேசத்தில் அநேக நாள் தங்கியிருந்தான்?

விடைகளை வருகின்ற 20-09-2023க்குள்
(WhatsApp #+91 8940523562) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் **ஆதியாகமம்** மற்றும் **யாத்திராகமம்** ஆகிய ஆகமங்களில ஆகிய அதிகாரத்தில் பதிலை கண்டுபிடிக்கவும்.

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7

## 2023 – செப்டம்பர் மாத வேத வினாவுக்கு விடை

1. பொறுமையாய் ( எபிரெயர் 10:36)

2. பிள்ளைகள் பெற்றோருக்கு கர்த்தருக்குள் கீழ்படிவது( எபே 6:1 )

3. தூதர்கள் ( எபிரெயர் 1:13,14 )

4. புறஜாதிகள் வாக்குத்தத்திற்கு
   உடன் பங்காளிகளாயிருக்கிறார்கள் ( எபே 3:3 )

5. கிறிஸ்துவடனெ கூட உயிர் பெற்றவர்கள் ( எபே 2:5 )

6. இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதல் ( எபிலெயர் 6:18 )

7. வாக்குதத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் ( எபே 1:13 )

8. கிழ்படிதலை ( எபிலெயர் 5:8 )

9. ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு, சாராள் ( எபிரெயர் 11:8–3 )

10. கர்த்தர் ( எபிரெயர் 8:8 )

11. பெத்பகே பெத்தானியா (மத் 21:11)

12. மெல்கிசேதக்கு ( எபிரெயர் 7:8 )

13. நன்மை செய்வது தானதர்மம் செய்வது ( எபிரெயர் 13:16 )

14. கிறிஸ்து சபைக்கு தலை, புருஷன் மனைவிக்கு தலை ( எபே 5:23 )

15. வானங்கள் ( எபிரெயர் 1:12)

## 2023– செப்டம்பர் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis.சுகந்தி தம்பு குமார்
Sis.நித்யா ஜோன்ஸ்
Sis. பியூலா மெர்ஸி பால்
Sis. ஜீனா சதீஸ்
Sis.ஜெஸ்லெட் வர்கீஸ்
Sis.சாந்தி

Bro.எபினேசர்
Bro.பால் ராஜ்

நோக்கி யாதொரு விண்ணப்பம் பண்ணினால் அவன் சிங்கக் கெபியில் போடப்பட வேண்டும் என உத்திரவடும்படி வேண்டிக்கொண்டனர் காரணம் தானியேல் ஒரு நாளைக்கு தவறாமல் மூன்று வேளையும் ஜெபம் செய்கிறவனாயிருந்தான்.

ராஜாவால் உத்தரவிடப்பட்ட பின்னும் தானியேல் சற்றும் பின்வாங்காமல் தவறாமல் தேவனிடத்தில் ஜெபம் செய்தான். இதை காரணமாக கொண்டு ராஜாவினிடத்தில் முறையிட்டு அவன் செய்தது தவறு என தீர்மானிக்கப்பட்ட தானியேல் சிங்க கெபியில் போடப்பட்டான்.

தேவன் சிங்கங்களின் வாயை கட்டிப்போட்டு தானியேலின் தேவன் வல்லமையுள்ள தேவன் என்பதை உலகம் அறியும்படியாக நிரூபித்தார். அவனுக்கு வகித்து வந்த பதவியிலிருந்து உயர் பதவி கொடுக்கப்பட்டு ராஜ்யத்தின் சகல ஆளுமைக்கும் தலைவனாக தானியேல் ராஜாவால் தேர்வு செய்யப்பட்டான்.

அன்பான வாலிப சகோதர சகோதரிகளே இத்தகைய சூழலில் காணப்படுகிறீர்களா? தானியேலின் தேவன் தானியேலோடு கூட இருந்து காரியத்தை வாய்க்க செய்தது போல, உங்களோடும் கூட இருந்து சகல சத்துருக்களுடைய கண்கள் காணும்படியாக உங்களை மேன்மைபடுத்தி அழகு பார்ப்பார்.

தேவன்தாமே நம் அனைவரோடுங்கூட இருந்து நம்மை ஆசீர்வதிப்பாராக.

**வாலிபம் இயேசுவுக்கே.**

## சகோதரிகள் பகுதி

அன்பான சகோதரிகளே, இயேசுவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகிறேன். வாழ்க்கை என்பது என்ன? பிறப்பிற்கும், இறப்பிற்கும் இடையே ஒரு குறிப்பிட்ட கால கெடுவிற்குள் நிகழும் சம்பவங்கள் தான் வாழ்க்கை. இந்த சம்பவங்கள்தான் நமக்கு பலவித படிப்பினைகளை கற்றுத் தருகின்றன. வாழ்க்கையின் உயர்வு, தாழ்வுகள்தான் மனிதர்களை நல்லவர்கள் யார்? தீயவர்கள் யார்? என்று அடையாளம் காட்டுகின்றன. தந்தை பெர்க்மான்ஸ் அடிகளார் இவ்விதமாக பாடுகின்றார்.

வாழ்க்கை என்பது போராட்டமே... நல்லதொரு போராட்டமே.... முயன்று போராடி வெற்றி பெறு என்று. இவ்விதமாக வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் போராடி வெற்றி பெற்று தேவனின் உதவியோடு ராஜ மேன்மைக்கு உயர்த்தப்பட்ட எஸ்தர் ராஜாத்தியின் தனித்துவமான பண்புகளை வேதாகமத்தின் அடிப்படையில் ஆராய்வோம்.

## 1.கர்த்தருக்கு பயப்படுதல்

சிறு வயதிலேயே தாய், தந்தையை இழந்த எஸ்தர் சாதாரன குடும்ப சூழ்நிலையில் தன் சிறிய தகப்பன் மொர்தகாயின் அரவணைப்பில் வாழும் போதே... கர்த்தருக்கு பயந்த மகளாக தன் சிறிய தகப்பனின் கட்டளைக்கும், போதனைக்கும் கீழ்ப்படிந்து வாழும் மகளாக வாழ்ந்தாள். தேவனுக்கு பயப்படும் இந்த குணமே... பிற்காலத்தில் 127 நாடுகளையும் அரசாண்ட ஆகாஸ்வேருவின் மனைவியாக, ராஜாத்தியாக உயர வழி வகுத்தது.
சகோதரியே, "கர்த்தருக்கு பயப்படும் ஸ்தீரியே புகழப்படுவாள்" வாழ்க்கையின் எந்த நிலையில் நாம் இருந்தாலும், எப்பேற்பட்ட சூழ்நிலையில் வாழ்ந்தாலும் கர்த்தருக்கு பயப்படும் பயமே நம்மை உன்னதமான நிலைக்கு உயர்த்தும்.

## 2.உபவாச தாரகை

தன் இனம் யூதகுலம் அழிக்கப்பட போகிறது என்பதை அறிந்த எஸ்தர் (எஸ்தர்–4:16)–ல் எழுதியபடியே சூசானிலிருக்கிற யூதர்களையெல்லாம் கூடி வர செய்து மூன்று நாட்கள் அல்லும் பகலும் புசியாமலும், குடியாமலும் இருந்து எனக்காக உபவாசம் பண்ணுங்கள் என்று தனக்காக உபவாசமிருந்து ஜெபிக்க பணிக்கின்றாள். அதே நேரம் அவளும் அவள் தாதி மார்களும் உபவாசம் பண்ணுவோம் என்று கூறுகின்றார்கள். காரணம் என்ன? சட்டத்தை மீறி ராஜாவிடத்தில் பிரவேசிக்கும் நிலையில் கரணம் தப்பினால் மரணம் என்ற சூழ்நிலையில் நான் செத்தாலும் சாகிறேன் என்று கூறுகிறாள்.
ஆம் சகோதரியே, நம் வாழ்வின் சில நேரங்களிலும், சில சந்தப்பங்களில் கடினமான சூழ்நிலைகளில் முடிவுகள் எடுக்கும் முன் கர்த்தரின் பாதத்தில் அமர்வது முக்கியமானது. உபவாசமிருந்து ஜெபிக்கும் போது நாம் மேற்கொள்ளும் காரியங்களில் கர்த்தர் வெற்றி தருவார். காரியத்தை வாய்க்க செய்வார் என்பது நிச்சயமானது.

## 3.விவேகமான அரசி

எஸ்தர்–7:3–ல் "ராஜாவுக்கு சித்தமாக இருந்தால் என் வேண்டுதலுக்கு என் ஜீவனும், என் மன்றாட்டுக்கு என் ஜனங்களும் எனக்கு கட்டளையிடப்படுவதாக" என்று பணிவாக தன் வேண்டுகோளை ராஜ சமூகத்தில் சம்பவிக்கும் அதே நேரத்தில் எஸ்த–7:4–ல் வசனத்தின் படியே "நானும் என் ஜனங்களும் அடிமைகளாகவும், வெள்ளாட்டிகளாகவும், விற்கப்பட்டாலும் நான் மவுனமாயிருப்பேன் ஆனால் இப்பொழுதோ இராஜாவுக்கு உண்டாகும் நஷ்டத்துக்கு அந்த சத்துரு உத்தரவாதம் பண்ண முடியாது என்று கூறி ஆமானே அந்த சத்துருவும், பகைஞனுமானவன் என்று அந்த இடத்தில் மிகவும் நுட்பமாக மிகவும் விவேகமாக சாதுரியமாக விரைவாக செயல் பட்டு தன் குலத்தின் சத்துருவை அரசனின் முன் அடையாளம் காட்டுகின்றாள்.

ஆம் சகோதரிகளே, இவ்வுலக வாழ்க்கையில் நம்முடன் நட்புடன் இருப்பவர்களையெல்லாம் நல்லவர்களாக நினைக்கிறோம் ஆனால் முகத்திற்கு நேராக அன்புடன் போகின்றவர்கள் முதுகுக்கு பின்னால் புறணி பேசுகிற அவலநிலையை நாம் எதிர் கொள்கிறோம். நாம் தான் அப்படிப்பட்ட மனிதர்களை இனம் கண்டு கொள்ள வேண்டும். வேகத்தோடு செயல்படுவது முக்கியமாக இருந்தாலும் விவேகத்தோடும் நடந்துகொள்ள வேண்டும் என்பதை எஸ்தரில் வாழ்வின் வரலாற்றிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

## 4.தன் ஜனத்தின் மேல் வைக்கும் பிரியம்..

எஸ்தர்–8:6–ல் " என் ஜனத்திற்கு வரும் அழிவை நான் எப்படி சகிக்கக்கூடும்" என்று தன் ஜனமாகிய யூத குலத்தின் மேல் எஸ்தர் வைத்திருந்த அதிகப்படியான அன்பு வேதனையான சூழ்நிலையை மாற்றி மகிழ்ச்சியான நிலையை கொண்டு வந்தது. " நண்பன் பகைஞன் ஆனான் பகைஞன் நண்பன் ஆனான். ஆம் சகோதரியே, கர்த்தர் கரம் எஸ்தரோடு இருந்ததால் தேவன் மொர்தகாயை உயர்த்தி ராஜ மேன்மையில் வைத்தார். ஆமானோ தூக்கு மரத்தில் தூக்கிலிடப்பட்டு சபிக்கப்பட்டவன் ஆனான். (எஸ்த–8:16)–ல் உள்ளபடியே யூதருக்கு மகிழ்ச்சியும், களிப்பும், வெளிச்சமும், சமாதானமும் உண்டாயிற்று.

சகோதரியே, கர்த்தர் தம் ஜனத்தை ஆசீர்வதிப்பார் கர்த்தர் தம் ஜனத்திற்கு பெலன் அளிப்பார் என்ற வார்த்தைகளின்படியே தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனமாகிய யூத குலத்தை தேவன் ஆசீர்வதித்தார். நாமும் எஸ்தர் ராணியைப் போல தேவனுக்கேற்ற நற்பண்புகளை கொண்டிருப்போமானால் நிச்சயமாக தேவன் நம்மை ஆசீர்வதித்து வழி நடத்துவார்.

துதியும், கனமும், ஸ்தோத்திரமும் தூயாதி தூயவருக்கே உண்டாவதாக.

இப்படிக்கு
அன்பு சகோதரி
அனிதா ஆரோக்கியதாஸ்



# Kids Corner




## Bible Verses from A - Z

A - All have sinned, and come short of the glory of God (Rom 3: 23)
B - Believe on the Lord Jesus Christ, and thou shalt be saved (Acts 16: 31)
C - Children, obey your parents in the Lord, for this is right (Eph 6 : 1)
D - Depart from evil and do good (Ps 34: 14)
E - Even a child is known by his doings (Pro 20: 11)
F - Fear not; for I am with thee (Is 43: 5)
G - God is love (1 John 4: 8)
H - Honor thy father thy mother (Exo 20: 12)
I - If ye shall ask any thing in my name, I will do it. (John 14: 14)
J - Jesus saith unto him, I am the way, and the truth, and the life: no one cometh unto the Father, but by me (John 14: 6)
K - Keep thy tongue from evil (Ps 34:13)
L - Look unto me and be ye saved (Is 45:22)
M - My son, give me thine heart.(Pr 23: 26)
N - No man can serve two masters (Mat 6:24)
O - Oh, give thanks unto the Lord, for He is good (Ps 118:1)
P - Praise ye the Lord; for it is good to sing praises unto our God (Ps 147: 1)
Q - Quit you like men, be strong (1 Corin 16: 13)
R - Remember the sabbath day, to keep it holy (Ex 20: 8)
S - Seek ye the Lord while He may be found (Is 55: 6)
T - Thou God, seest me (Gen 16: 13)
U - Unto thee, O God do we give thanks (Ps 75: 1)
V - Verily, verily, I say unto you, Whatsoever ye shall ask the Father in my name, he will give it you (John 16: 23)
W - When I'm afraid, I will trust in thee (Ps 56: 3)
X - Exceeding great and precious promises are given unto us (2 Peter 1: 4)
Y - Ye are the light of the world (Mat 5:14)
Z - Zion heard and was glad (Ps 97: 8)

D. Vincy Raani

# Answers for the last month puzzle

## Last Month Buzzle Answers

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | B | Y | O | D | G | J | N | A | T | H | A | N | C | B |
| D | X | X | Q | S | T | U | V | W | E | P | H | W | Y | I |
| L | E | U | M | A | S | D | W | W | P | R | C | A | L | B |
| L | D | A | N | I | E | L | B | H | K | M | U | X | F | G |
| O | A | S | D | G | H | E | F | A | O | R | S | T | I | V |
| M | K | Q | P | S | R | E | X | Y | L | V | O | L | S | N |
| G | N | B | G | O | N | L | H | J | L | A | I | K | A | M |
| P | B | O | Q | R | M | I | R | T | W | X | A | Y | I | Z |
| T | O | L | A | M | F | J | K | Z | P | S | O | M | A | Q |
| Q | Z | I | O | G | H | A | J | L | U | V | O | E | H | M |
| B | D | S | Z | Y | M | H | N | A | B | O | D | Z | P | O |
| T | E | M | R | R | S | Q | T | A | J | O | E | L | K | L |
| S | A | R | T | W | L | O | I | J | O | V | B | Q | Z | Z |
| Q | T | A | D | F | Z | E | C | H | A | R | I | A | H | B |

Sharon Grace. M

## Who am I ?

1 I was in the beginning. Who am I?
2 Jesus saw me when I was under the fig tree. Who am I?
3 I am the lamb of God. Who am I?
4 Jesus gave me a new name as Cephas. Who am I?
5 I was given through Moses. Who am I?
6 It took 46 years to build me. Who am I?
7 Became flesh and made his dwelling amng us. Who am I?
8 I am the voice of one calling in the wilderness. Who am I?
9 I followed Jesus and then told my brother that I found the Messiah. Who am I?
10 We are made of stone. We are 6 in count. Who are we?

D. Amish

Find the answers in John chapter 1&2. Answers next month

Answers will be next month.

# கடந்த மாத நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில



# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

முதன்மை ஊழியர்

சகோ. S.ஸ்டாலின்

66021072 - 96760452

செயலாளர்

சகோ. S. சுகுமார்

99837646

பொருளாளர்

சகோ. S. சிவ குமார்

97224276

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி. செலின் டேவிட்

65967170 - 99368775

வாலிப ஐக்கிய தலைவர்

சகோ. சுபின் சிங்

65197164-65772762

Church Website Address - ahmaditamilchurch.com

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only